# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 27, 2025

Weekly E-paper • September 27, 2025





# மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியுமாய்..!

சுப. வீரபாண்டியன்

## கரிகால்சோழனும் கல்லணையும்!

எழில்.இளங்கோவன்

## ‘நடிப்பது’தான் ‘சர்க்கார்’

தலையங்கம்

## தீ பரவட்டும்!

பேரறிஞர் அண்ணா

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 27, 2025

Weekly E-paper ● September 27, 2025


# மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியுமாய்..!

சுப. வீரபாண்டியன்



இன்னொரு அரசு விழா என்றுதான் எல்லோரும் நினைத்தோம்! ஆனால் 25.09.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற "கல்வியில் சிறந்த தமிழ்நாடு " என்னும் அந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சிகளில் பார்த்தபோது, நெஞ்சம் நெகிழ்ந்து போனது !

ஆயிரம் ரூபாய் பெரிதாய் என்ன செய்து விடும், புதுமைப் பெண், நான் முதல்வன் திட்டங்கள் எல்லாம் என்ன பெரிய மாற்றங்களைச் செய்துவிடும் என்று கேட்டவர்களுக்கும், கேலியாய்ப் பேசியவர்களுக்கும், அன்றைய விழா, கன்னத்தில் அறைந்து விடை சொல்லி இருக்கிறது!

பயன்பெற்ற பிள்ளைகள், மேடையில் ஏறித் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட போது, அடடா இத்தனை பெரிய திட்டங்களா இவை என்று நம்மையே கூடச் சில நிமிடங்கள் வியந்து பார்க்க வைத்தனர் ! இந்தத் திட்டத்தினால் பயன் பெற்று, தாம் பெற்ற முதல் ஊதியத்தைத் தங்கள் பெற்றோரை மேடைக்கு அழைத்துப் பிள்ளைகள் இருவர் கொடுத்தபோதும், அவர்களின் பெற்றோர் தட்டுத் தடுமாறி மேடையில் வந்து அதனைப் பெற்றுக் கொண்ட போதும், கலங்காத கண்கள் உண்டா!

ஒரு மாணவன் தான் ஒரு துப்புரவுத் தொழிலாளியின் மகன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கிய போது, மாண்புமிகு முதல்வர் குறுக்கிட்டு, தூய்மைப் பணியாளர் என்று சொல்லுங்கள் எனக் கூறினார்! அந்தப் பிள்ளை இப்போது மருத்துவம் படித்துக் கொண்டிருக்கிறான்.

இந்தத் திட்டங்களால் பயன்பெற்று, தான் ஜப்பானில் சென்று படித்து வந்திருக்கிறேன் என்று ஒரு பெண் கூற, அவரைப் பார்த்து அந்நிகழ்ச்சியின் தொகுப்பாளர், அப்படியானால் நீங்கள் ஜப்பான் மொழியில் பேசுவீர்களா என்று கேட்க, தொடர்ந்து இரண்டு நிமிடங்கள் ஜப்பான் மொழியில் பேசி, அந்தப் பெண் முதலமைச்சருக்கு நன்றி கூறினார்!

சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த தெலுங்கானாவின் முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, தங்கள் மாநிலத்திலும் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வரப் போவதாக அறிவித்தார்!

திராவிடம் வழிகாட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியுமாய் உள்ளது! ●

## திராவிட இயக்க தமிழர் பேரவை
### பழனியில் புதிய கிளை!



04.10.2025 சனிக்கிழமை மாலை, பழனியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் புதிய கிளை தொடங்கப்பட இருக்கிறது! ஏறத்தாழ 100 பேர் உறுப்பினர்களாகத் தம்மை அன்று இணைத்துக் கொள்கின்றனர்!

அடுத்த நாள் கோவை, திருப்பூர் மாவட்டங்களின் சார்பில், 300க்கும் மேற்பட்ட "திராவிட முழக்கம் " மாத இதழுக்கான ஆண்டுக் கட்டணங்கள், பேரவையின் தலைவர், பொதுச்செயலாளரிடம் வழங்கப்பட இருக்கின்றன!

# கரிகால்சோழனும் கல்லணையும்!

எழில்.இளங்கோவன்

காவிரியில் கல்லணையைக் கட்டியவர் யாரெனக் கேட்டால் பளிச்செனச் சொல்லி விடுவார்கள், கரிகாலன்தான் என்று. இன்று பெரும்பான்மையினர் இப்படிச் சொன்னாலும் முக்கியமானவர்கள் இதைப்பற்றிப் பேசாமல் இருக்கிறார்கள் என்பது சந்தேகத்தை எழுப்புகிறது. யார் அவர்கள்?

வரலாற்றுப் பேராசிரியர்களான கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார், டாக்டர் மா.இராசமாணிக்கனார், பேராசிரியர் க.அப்பாத்துரையார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், மயிலை சீனி.வேங்கடசாமி, பேராசிரியர் வெ.சு.சுப்பிரமணிய ஆச்சாரியார் போன்ற சோழர்கள் குறித்த ஆய்வாளர்கள் ஏன் கரிகாலன் கட்டிய கல்லணை குறித்து எதுவும் சொல்லாமல் மௌனம் காத்தார்கள்?

இந்தக் கூற்றை மறுக்கிறார் பேராசிரியர் மா.இராசமாணிக்கனார். இரண்டு கரிகாலன்தான் சங்ககாலத்தில் இருந்தார்கள் என்று உறுதி செய்கிறார் (சோழர் வரலாறு). இவரின் கருத்தை கா.அப்பாத்துரையார் ஏற்றுக்கொண்டு, அதற்கு வலிமை அவர் சேர்க்கிறார். (தென்னாட்டுப்போர்க்களங்கள்).

சோழன் கரிகாலன், வெண்ணிப் பறந்தலைப் போரில் சேரன் பெருஞ்சேரலாதன் நெஞ்சில் வேலெறிந்து, அவ்வேல் முதுகுப்புறம் வந்ததால் நாணி வடக்கிருந்து அம்மன்னன் உயிர்நீத்தான் என்பதைப் புறநானூறு கூறுகிறது. இந்தச் சோழன்தான் முதல் கரிகாலன் ஆவான்.

புலவர்கள் கழாத்தலையார் (புறம்: 65), வெண்ணிக் குயத்தியார் (புறம்:66), பரணர் (அகம்: 125, 246, 376), மாமூலனார் (அகம்: 55), நக்கீரர் (அகம்: 141) உள்ளிட்டப் புலவர்கள் பாடிய இந்த அகப் புறப்பாடல்களால் சோழன் கரிகாலனின் வீரம் உள்ளிட்ட செறிந்த செய்திகளை நாம் அறிகிறோம். ஆனால் சங்கப்பாடல்கள் எவையொன்றிலும் கரிகாலன் கல்லணை கட்டினான் என்றோ அல்லது கல்லணை பற்றிய சிறு குறிப்போகூடக் காணக் கிடைக்கவில்லை. இக்கரிகாலன் காலம் கி.மு.2 ஆம் நூற்றாண்டு என்பார் மா.இராசமாணிக்கனார்.



## கல்லணையைக் கட்டியவன் கரிகாலன்தானா?

பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் வெ.சு.சுப்பிரமணியன் சொல்கிறார், சங்ககாலத்தில் கரிகால் சோழர்கள் மூவர் இருந்தார்கள் என்று. அதாவது சங்கப்பாடல்கள் மூலம் பாடப்பட்டவன் முதல் கரிகாலன். பொருநராற்றுப்படையின் கரிகாலன் இரண்டாம் கரிகாலன். பட்டினப்பாலைக் கரிகாலன் மூன்றாம் கரிகாலன் என்று அவர் தன் ஆய்வு நூலில் சொல்கிறார் (கரிகாலர் மூவர்).

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

# ‘நடிப்பது’தான் ‘சர்க்கார்’

தலைவர் கலைஞர் அவர்கள் 'பராசக்தி' படத்தில், எதிர்காலத்தில் கை ரிக்சாவை ஒழிப்பதாக வசனம் எழுதி இருந்தார். அவரின் ஆட்சியில் கை ரிக்சா ஒழிந்தது. அவர் முதிர்ந்த அரசியல்வாதி. திரைப்படத்தில் சொன்னதை அரசியல்வாதியாக நிறைவேற்றிக் காட்டினார்.

'சர்க்கார்' என்று ஒரு படம் வந்தது. அதில் கதாநாயகனாக நடித்த விஜய், தன்னுடைய வாக்கை வேறு ஒரு நபர் கள்ள ஓட்டாகப் போட்டுவிட்டார் என்பதற்காகப் பெரும் போராட்டம் நடத்தினார்.

தேர்தலைப் பாதியில் நிறுத்தினார், அமையவிருந்த ஆட்சியைத் தடுத்தார். 'ஒரு ஓட்டு என்ன சும்மாவா? அது வாக்காளரின் உரிமை' என்று வசனமெல்லாம் பேசிப்பேசி, விஜயின் வாக்கு திருடப்பட்டதற்கு எதிராக மக்களையெல்லாம் திரட்டிப் போராடினார், பார்த்தோம்.

இப்பொழுது பீகாரில் 65 லட்சம் வாக்குகள் திருடப்பட்டிருக்கிறது, கர்நாடகாவில் 6,000 வாக்குகளுக்கு மேல் திருடப்பட்டுள்ளது என்று எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெருத்தெருவாக மக்களிடம் கத்திக்கொண்டு இருக்கிறாரே, தெரியுமா விஜய்க்கு? அதுபற்றி இதுவரையும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே அவர்.

மாநாடு நடத்துவார், பொதுச்சொத்துகள் சேதமாகும். மின்சாரத்தை நிறுத்தச் சொல்லி மனு கொடுப்பார்கள். பிறகு அங்கே போய் நின்றுகொண்டு 'நான் பேசும்போது கரண்டை கட் பண்ணுறாங்க' என்று கூவிக் கொண்டிருப்பார்.

எம்.ஜி.ஆர் நடிகர்தான். அவர் அரசியலுக்குத் தி.மு.க. இருந்தது.

நடிகர் என்பது மட்டும் அரசியலுக்குத் தகுதியல்ல. விஜய்க்கு அரசியலும் தெரியாது, அதில் முதிர்ச்சி பெறவும் முடியாது.

முதிர்ந்த அரசியல்வாதியான முதலமைச்சரை,

'ஸ்டாலின் அங்கிள்' என்றும் 'சார்' என்றும் பொதுமக்கள் முன்னிலையில் ஏளனமாகப் பேசிய நடிகர் விஜய்யின் சினிமா அரசியலை மக்கள் பார்த்துவிட்டார்கள்.

இனியும் தொடர்ந்து அவரின் கூத்துகளைப் பார்க்கலாம்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

இனி இரண்டாம் கரிகாலனைப் பார்ப்போம். இம்மன்னனின் இயற்பெயர் திருமாவளவன். 'பத்துப் பாட்டு' நூல் வரிசையில் இரண்டாம் பாட்டாக இருப்பது 'பொருநராற்றுப் படை'. 248 அடிகள் கொண்ட இந்த ஆற்றுப்படை நூலைப் பாடியவர் பெயர் முடத்தாமக்கண்ணியார். அதுபோல பத்துப்பாட்டின் ஒன்பதாம் பாட்டாக வருவது 'பட்டினப்பாலை'. 301 வரிகளைக் கொண்ட இந்நூலைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய இவ்விரு நூல்களுக்கும் பாட்டுடைத் தலைவன் கரிகால் வளவன் தான். இந்த இரு பாட்டிலக்கியமும் காவிரியின் சிறப்பு, சோழநாட்டு வளம், துறைமுகம், உழவர் குடிச்சிறப்பு, திருமாவளவன் ஆட்சி ஏற்றல், திருமாவளவனின் போர்கள், ஆக்கப்பணிகள் போன்றவைகளைப் பற்றிப் பேசுகின்றன. காட்டை அழித்து நாடாக்கி, குளங்கள் பல தோண்டி, நாட்டின் வளத்தைப் பெருக்கியவன் கரிகாலன் ( 283-285) என்று சொல்லும் இந்நூலில், ஏன் காவிரியில் கல்லணை கட்டிய செய்தி வரவில்லை. இவன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு.

இவை தவிர நச்சினார்க்கினியர், இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், அடியார்க்கு நல்லார், அரும்பதவுரைக்காரர், பேராசிரியம், பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள் கரிகாலன் கல்லணை கட்டினான் என்று எங்கும் சுட்டிக் காட்டவில்லை. இறையனார் அகப்பொருளுரையில் கூட இச்செய்தி கூறப்பவில்லை.

1) முதலாம் கரிகாலனைப் பேசும் சங்கப் பாடல்களில் அவன் கல்லணை கட்டியதாகச் செய்தியில்லை. 2) பொருநராற்றுப்படை / பட்டினப்பாலையிலும் கல்லணையைக் கரிகாலன் கட்டினான் என்ற செய்தியில்லை. 3) சங்கநூல்களின் உரையாசியர்களும், இன்றைய வரலாற்றுப் பேராசிரியர்களும் கல்லணை பற்றிப் பேசவில்லை.

அப்படியானால் காவிரியாற்றில் கல்லணை கட்டிய சோழ மன்னன் யார்? வரலாற்று ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், அறிஞர்கள் இவர்கள்தான் இதற்கான விடையைக் கண்டு சொல்ல வேண்டும், உரிய சான்றுகளுடன். ●

# தீ பரவட்டும்!



"கம்பராமாயணத்திலே, எந்தச் சருக்கத்திலே, எத்தனையாவது பாடலிலே, தமிழர் இழிவுபடுத்தப்பட்டு, ஆரியர் உயர்த்தப்பட்டு, எழுதப்பட்டு இருக்கிறது? படித்துக் காட்டுங்கள் கேட்போம்" என்று பண்டிதர்கள் கேட்கின்றனர். கம்பராமாயணத்திலே, இன்ன பாட்டினால் தமிழன் இழிவுபடுத்தப் படுகிறான், ஆரியன் உயர்த்தப்படுகிறான் என்று நாங்கள் சொன்னதுமில்லை; அது அவசியமும் இல்லை. அந்த ஆராய்ச்சியிலல்ல நாங்கள் ஈடுபட்டிருப்பது. கம்பராமாயணக் கருத்தினால், அதைக் கற்று மக்கள் வாழ்க்கையில் அமைத்துக் கொள்ளும் கொள்கைகளால், ஆரியர் உயரவும் தமிழர் தாழவும், ஆரியர் ஆதிக்கம் செலுத்தவும், தமிழர் அடிமைகள் ஆகவுமான விளைவு நேரிட்டது என்பதே நாங்கள் கூறுவது. அத்தன்மையான விளைவைத் தரும் கேடுகள் இனி வேண்டாம் தமிழருக்கு என்று கூறுகிறோம். கலப்பற்றத் தமிழ்க்கலையுடைய தமிழருக்கு கற்பனையும், ஆரியநெறியும், கலையும் எதற்காக இருக்கவேண்டுமென்று கேட்கிறோம்.

ஆகவே பாடலைப்படி, பதம்பிரி, பொருள் உரையென்று கேட்பது முறையாகாது. மேற்படி நூல்களை மக்கள் அறிந்திருந்ததால் அவர்கள் கொண்ட கருத்து என்ன? அதன் விளைவு என்ன? அதன் பயனாக இன்று தமிழன் அடைந்துள்ள நிலையென்ன? என்பதே எமது கேள்வி. நூற்றுக்குத்தொன்னூறுபேர் தற்குறிகளாக உள்ள நாட்டிலே இனத்தின் உயர்வுக்கும், ஆதிக்கத்திற்கும் பயன்படும் ஏடுகள் மனதில் பதியும்படி செய்வது முறையாகுமா? அங்ஙனம் பிற இனத்தின் கலையிலே ஊறும் மனம் இன எழுச்சி பெறமுடியுமா? இனமானம் கோரவோ, தனியரசு பெறவோ முடியுமா என்பதை யோசிக்க வேண்டுகிறேன். ஆகவே தமிழன் தன்மானத்திற்காகவும், தன்னரசுக்காகவும் போராடும் சுயமரியாதைக்காரர்கள், அந்த முயற்சிக்குக் குறுக்கே நிற்கும் ஏடுகளைக் கொளுத்துவோம் என்று உரைக்கின்றனர்.

இராமாயணம் வைணவர்க்கு மேலான நூல். பெரியபுராணம் சிவனடியார்களின் பக்தியை விளக்கிடும் நூல். சைவம், வைணவம் எனும் இரு மார்க்கங்களையும் பின்பற்றும் தமிழ் மக்கள் முறையே பெரியபுராணம், கம்பராமாயணமாகிய இரு நூல்களையும் தமது மார்க்க நூல்களாகக் கொள்கின்றனர். வைணவம், சைவம் எனும் இரண்டும் இந்து மார்க்கத்தின் கிளைகள். தமிழர் இந்துக்கள் அல்லர். தமிழருக்குத் தனிமொழியுண்டு என்றாலும் இவ்விரு மார்க்கங்களையும் தழுவிக் கொள்வதால் தமிழர் தம்மை இந்துக்கள் என்று கருதிக் கொள்வதால் தமிழர், தாங்கள் தனி இனம் என்பதை மறுத்து, இந்துக்களில் ஒரு பகுதி என்று எண்ணி தன்மானத்தையும், தன்னரசையும் இழந்தனர்.

இதற்குக் கம்பராமாயணமும், பெரியபுராணமும் பயன்படுகின்றன. எனவே அவைகளைக் கொளுத்திக் காட்டி 'தமிழரே, இவை இந்துக்களுக்கு மார்க்க நூல்கள், தமிழருக்கு அல்ல. தமிழருக்குத் தனி நெறியும், கலையும் உண்டு' என்று இன எழுச்சியை உண்டாக்கித் தமிழருக்கு தனியாக நாடு கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது எமது திட்டம்.

தமிழர்களுக்கு, ஆரிய மார்க்கமாகிய இந்துமதத்தின் இருகிளை நூல்களான கம்பராமாயணமும், பெரியபுராணமும் கூடாது என்று கூறுகிறோம். அவைகளிலே ஆபாசங்களும், ஆரியக்கற்பனைகளும் உள்ளன. ஆரிய மார்க்கம் தீங்கே தரும். ஆகவே தமிழர் எழுச்சிபெற, ஆரியத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே, ஆரியத்தை வளர்க்கும் மேற்படி நூல்களைக் கொளுத்த வேண்டும் என்று கூறுகிறோம்.

**– பேரறிஞர் அண்ணா**

(14-3-1948ஆம் நாளன்று சேலம், செவ்வாய்ப் பேட்டைத் தேவாங்க பாடசாலை மண்டபத்தில், நாவலர் சோமசுந்தர பாரதியாருடன் நடந்த சொற்போரில் சிறு பகுதி)

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian